# ஜெயலலிதாவுக்கு ஒரு அப்பாவி வாக்காளனின் பகிரங்க கடிதம்..

அன்புள்ள செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு,

வணக்கம். உங்களுக்குக் கடிதம் எழுதுவதற்குக் கொஞ்சம் பயமாகத்தான் இருக்கிறது. ஏனென்றால், கடிதம் எழுதுவதிலும் அதை வாபஸ் வாங்குவதிலும் நீங்கள் மிகவும் தேர்ச்சியுள்ளவர்.

எனவே, உங்களுக்கு நான் - ஒரு அப்பாவி வாக்காளனாகிய நான் - கடிதமெழுதும்போது, முதலிலேயே ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்திவிடுகிறேன். நான் இந்தக் கடிதத்தை நிச்சயமாகத் திரும்பப் பெறப்போவதில்லை. தபாலில் அனுப்பப் போய், கடைசி நொடியில் பெட்டியில் போடாமல் வந்துவிடப்போவதுமில்லை.

சென்ற வாரம் முழுவதும் உங்களைப் பற்றிய பேச்சுதான் தமிழ்நாட்டில். எல்லோருக்கும் ஒரு புரியாத புதிராக நீங்கள் ஆகிவிட்டீர்கள். ஒரு தினசரிப் பத்திரிகையில். இனிமேல் தினமும் 'வெதர் ரிப்போர்ட்' போடுகிற மாதிரி, 'இன்றைய ஜெயலலிதா அரசியல் நிலவரம்' என்று ஒரு புதுப் பகுதி ஆரம்பிக்கப் போவதாகச் சொல்கிறார்கள்.

'ராஜினாமா - வாபஸ்... என்று ஒரு 'கின்னஸ்' சாதனையே படைப்பார் போலிருக்கிறதே! ஏன் இவர் இப்படிச் செய்கிறார்?' என்று எல்லோரும் கேட்கிறார்கள். உங்கள் கட்சியிலுள்ள மற்ற 'தலைவர்'களுக்குக்கூட உங்கள் போக்குப் புரியவில்லை.

எனக்குக் கொஞ்சம் அரைகுறையாகப் புரிகிறது. எல்லா பொதுமக்களையும் போல, நானும் எங்களுக்கு வாய்த்திருக்கிற தலைவர்களை - அவர்கள் வாழ்க்கையைக் கொஞ்சம் உன்னிப்பாகவே கவனித்துக்கொண்டு வருகிறேன்.

ஏதோ திடீரென்று நீங்கள் இப்படி விநோதமாக நடந்து கொள்வதாக எனக்குத் தோன்றவில்லை. உங்கள் பொதுவாழ்க்கையின் ஆரம்பத்திலிருந்தே உங்களுக்கு ஒரு பிரச்னை இருப்பதாகத் தோன்றுகிறது.

1964-ல் நீங்கள் கதாநாயகியாக முதலில் 'வெண்ணிற ஆடை'யில் வந்தபோது, மெட்ரிகுலேஷன் படித்துக் கொண்டிருந்தீர்கள் என்று நினைக்கிறேன். எல்லா சினிமா

தாயார்களுக்கும் உள்ள ஆசை உங்கள் தாயார் சந்தியாவுக்கும் வர, நீங்கள் சினிமாவில் சிக்கிக்கொண்டீர்கள் என்றுதான் படுகிறது.

ஐ.ஏ.எஸ். எழுதி பெரிய உத்தியோகத்தில் அமரும் உங்கள் ஆசையில் மண் விழுந்தது. அந்த முதல் கோணல் முற்றும் கோணலாகி... உங்களுடைய இருபத்தைந்து வருட வாழ்க்கை முழுக்கவும் - நிர்ப்பந்தங்கள்தான்!

வேண்டாவெறுப்பாக நடிக்கப் போன இடத்தில், மீதி சகாக்களுடன் சகஜமாகப் பழகி மனத்தை ஆறுதல்படுத்திக்கொள்ள உங்களுக்கு முடியவில்லை. செட்டில் ஒதுங்கி உட்கார்ந்துகொண்டு, ஏதோ இங்கிலீஷ் நாவல் படித்துக் கொண்டிருந்தீர்கள். கர்வி, திமிர் பிடித்தவள் என்ற பெயரைச் சம்பாதித்துக் கொண்டீர்கள்.

தமிழ் சினிமா கதாநாயகர்கள் அன்றும் இன்றும் தங்களைவிடப் பத்து, இருபது, முப்பது வயது குறைவான பெண்களைக் கண்டுபிடித்து, தங்கள் ஜோடியாக்கி 'இளமை இமேஜை'க் காப்பாற்றிக் கொள்வது வழக்கம். அந்த வரிசையில் அப்போது எம்.ஜி.ஆருக்குத் தேவைப்பட்ட புதுமுகமாக நீங்கள் போய் மாட்டிக் கொண்டீர்கள்!

அதன்பிறகு நீங்களும் இந்த சினிமாவைவிட்டு ஓட ரொம்பவும்தான் விரும்பியிருக்கிறீர்கள், முயற்சித்தீர்கள். இந்தியாவின் சராசரிப் பெண்கள் பலரையும் போல, நீங்களும் யாராவது ஒரு 'நல்ல' ஆண்மகனைத் தேடிப் பிடித்துக் கல்யாணம் செய்துகொண்டு வாழ்க்கையில் 'செட்டில்' ஆகி, இந்தக் கொடுமையிலிருந்து விடுதலை பெற ஏங்கியிருக்கிறீர்கள். என்ன பிரயோஜனம்..? சினிமா நடிகை அவ்வளவு சுலபத்தில் குடும்ப வாழ்க்கையை நிம்மதியோடு அமைத்துக் கொண்டுவிட முடியாது என்ற நிலைமையிலிருந்து உங்களுக்கு மட்டும் எக்ஸெம்ப்ஷன் கிடைக்குமா என்ன..? ஷோபா, படாபட் ஜெயலட்சுமி என்று பாவம், எத்தனை பெண்களின் தனிப்பட்ட வாழ்க்கையை சினிமா உலகம் பலிவாங்கிவிட்டது!

ஆனால், நீங்கள் முயற்சியை விடவில்லை. சோபன்பாபுவோடு உங்களுக்கு ஒரு நல்ல உறவு அமைந்தது பற்றி நீங்களே பல முறை எழுதியிருக்கிறீர்கள். ஆனால், உங்கள் துரதிர்ஷ்டம் அவர் ஏற்கெனவே மணமானவராக இருந்தார். அப்போது பல பத்திரிகைகள் உங்கள் உறவைப் பற்றிக் கிசுகிசு செய்திகள் வெளியிட்டன. நீங்கள் துளியும் கலங்காமல், தைரியமாக அதற்குப் பதில் சொன்னது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. சோபன்பாபுவின் மனைவியாக வாழ்க்கை நடத்துவது பற்றி எந்த வருத்தமும் இழிவும் இல்லையென்றும், அவர் ஏற்கெனவே திருமணமானவராக இருப்பது சட்டச் சிக்கலை ஏற்படுத்துமே தவிர, வேறு பிரச்னை இல்லையென்றும் 'ஸ்டார் அண்ட் ஸ்டைல்' பத்திரிகைக்குக் கடிதம்கூட அனுப்பினீர்கள்.

இரண்டாவது மனைவியாக இருந்து குடும்பம் நடத்துவது சிரமம்தான். சாவித்திரியின் வாழ்க்கை எப்படிப் போய் முடிந்தது. அது போல உங்களுக்கும் இல்லற முயற்சி வெற்றி பெறவில்லை.

மொத்தத்தில், நீங்கள் சர்ச் பார்க்கில் படிக்கிறபோது நினைத்த மாதிரி எதுவுமே நடக்கவில்லை. செத்துப் போகலாம் என்றுகூடத் தோன்றும். நீங்களே போன வருடம் ‘இல்லஸ்ட்ரேடட் வீக்லி’ ஏட்டின் ஆசிரியர் பிரிதீஷ் நந்திக்குத் தந்த பேட்டியில் எவ்வளவு உண்மையாகச் சொல்லியிருக்கிறீர்கள் - “எவ்வளவு வலிமையுள்ளவளாக இருந்தாலும், ஒவ்வொரு பெண்ணும் வாழ்க்கையில் மிகவும் துன்பமான தருணங்களில் தற்கொலை செய்துகொள்ள நினைப்பது இயற்கைதான். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன.”

ஆனால், உங்களால் செத்துப் போகவும் முடியவில்லை! சாவதற்குச் சமமான வேலையில் இறங்கினீர்கள், சாவித்திரி படம் தயாரித்து அழிந்தது போல, நீங்களும் ஒரு சொந்தத் தயாரிப்பு முயற்சியில் இறங்கியதாக ஞாபகம். டூ லேட்... நீங்கள் வெறுத்த சினிமா உலகத்தை நீங்களாகவே விரும்பி ஏற்று வந்தபோது உங்களுக்கு வயதாகிவிட்டது. கதாநாயகர்கள் இன்னும் இளமையான ஜோடிகளைத் தேடிப் பிடித்துவிட்டார்கள்!

நல்ல ஆங்கில அறிவும், படிக்கிற பழக்கமும் இருந்ததால் - புதுத் துறையில் இறங்கினீர்கள். கட்டுரைகள், கதைகள் எழுதினீர்கள். அதில் ஒரு தொடர்கதை ஏறத்தாழ சுயசரிதை மாதிரியேகூட எழுதியிருக்கிறீர்கள். பத்திரிகை உலகத்தில் வெற்றிபெற விதிகள் வேறு. அதுவும் உங்களுக்கு இசைந்து வரவில்லை.

அந்த நேரத்தில்தான் மீண்டும் எம்.ஜி.ஆர். உங்கள் உதவியைத் தேடி வந்தார். அரசியல் தலைவராகப் புதிய சரித்திரம் படைத்துவிட்ட அவருக்கு உங்கள் உதவி தேவைப்பட்டது!

தன் சார்பாக ஓடியாடிப் பிரசாரம் செய்யவும், அப்படிச் செய்தால் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவருமாக ஒருவரை அவர் தேடினார். அவரோடு ஜோடியாக நடித்தவர்களில் சரோஜாதேவி மணமாகிக் குடும்ப வாழ்க்கைக்குப் போய்விட்டார். சரோஜாதேவிக்கு அடுத்தபடியாக நீங்கள்தானே எம்.ஜி.ஆரின் முக்கியமான ஜோடியாகப் பிரபலமாக இருந்தவர்..? உடனே உங்களைத் தமிழ் மாநாட்டில் நடனம் ஆடவைத்து, பிறகு கடலூர் கட்சி மாநாட்டில் அரசியலில் அரங்கேறவும் செய்துவிட்டார் எம்.ஜி.ஆர்.!

சரி, அவர் உங்களை அரசியலில் ஈடுபடுத்திய காரணம் புரிகிறது. நீங்கள் ஏன் அப்போது அரசியலில் இறங்கினீர்கள்..? அதற்கென்ன காரணம்..?

இத்தனைக்கும் உங்களுக்கொன்றும் எம்.ஜி.ஆர். மீது அபரிமிதமான மரியாதையும், பாசமும் இருந்தது என்று நம்பவும் இடமில்லையே...!

விருப்பமில்லாமல் சிறு வயதிலிருந்து அவருடன் சினிமா வாழ்க்கையில் இருந்தது பற்றிய உங்களுடைய எரிச்சலை, நீங்களே பலமுறை பகிரங்கப்படுத்தியிருக்கிறீர்கள். படப்பிடிப்பு நடக்கும் இடத்துக்கு எம்.ஜி.ஆர். வந்ததும் எழுந்து நிற்காமல், நீங்கள் தகராறு செய்த கதையை விவரமாக ‘குமுதம்’ பத்திரிகையில் தொடராகவே எழுதினீர்கள். அந்தத் தொடர் கட்டுரையே திடீர் நிர்ப்பந்தத்தால் நிறுத்தப்படுவதாகவும் நீங்களே அறிவித்தீர்கள்.

எனவே எம்.ஜி.ஆர். மீது அன்புகொண்டு, அவருக்கு உதவுவதற்காக அரசியலுக்கு வந்தீர்கள் என்று நினைக்க முடியவில்லையே! அரசியலில் ஆட்சியில் பலமான செல்வாக்குள்ளவராக இருந்த எம்.ஜி.ஆரை எதிர்க்க முடியாது என்று பயந்துகொண்டு வந்தீர்களா..? எம்.ஜி.ஆரை விமரிசித்த எம்.ஆர்.ராதா, கண்ணதாசன், சந்திரபாபு, அசோகன் இன்னும் நமக்குத் தெரியாத பலர் பட்டபாட்டை நீங்கள் மனத்தில் நினைத்துப் பயந்திருப்பீர்களோ என்று தோன்றுகிறது!

அரசியலில் நுழைந்த பிறகும்கூட, எம்.ஜி.ஆர். உங்களை ஓகோவென்று வைத்திருந்ததாகத் தெரியவில்லை. அவர் விரும்பினால் பதவி கொடுப்பதும், பதவியைப் பறிப்பதுமாகப் பலமுறை உங்களை அலைக்கழித்திருக் கிறாரே..?

உண்மையில் அவர் மீது அளவு கடந்த வெறுப்பு அல்லவா ஏற்பட்டிருக்க முடியும்..? நோய்வாய்ப்பட்டு அவர் இறந்ததும், நீங்கள் உடனே தந்த ஒரு பேட்டியில் தன்னிச்சையாக ஒன்றைச் சொன்னீர்கள்.'நான் விடுதலை பெற்றுவிட்ட உணர்வு ஏற்பட்டுள்ளது' என்று கூறினீர்கள் அதுதான் நிஜமோ..? யாரிடமிருந்து விடுதலை..?

யோசித்துப் பார்த்தால், உங்கள் வாழ்க்கையே நிர்ப்பந்தங்களால் அலைமோதியிருக்கிறது. தாயாரின் நிர்ப்பந்தத்தால் சினிமா. எம்.ஜி.ஆரின் நிர்ப்பந்தத்தால் அரசியல் .

அறிந்தோ அறியாமலோ அதனால்தான் நீங்கள் எம்.ஜி.ஆரைச் சரியாகவே பழிவாங்கினீர்களோ...?

அவர் இருந்த காலம்வரை அவருடைய அரசியல் எதிரியான கலைஞரால் எம்.ஜி.ஆரின் இமேஜை உடைக்கவே முடியவில்லை. எம்.ஜி.ஆர். ஆட்சியில் நடந்த ஊழல்கள், முறைகேடுகள் என்று பட்டியல் போட்டுத் தெருத் தெருவாகப் போய் கலைஞர் சொன்னார். 'ஊஹூம், எடுபடவில்லையே...

ஆனால், நீங்களோ - எம்.ஜி.ஆர். இறந்த ஒரு மாத காலத்துக்குள் என்னவெல்லாம் சாதித்துவிட்டீர்கள்...

அவர் தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் அலைந்து பிரசாரம் செய்து உருவாக்கிய இயக்கத்தை கொஞ்ச நாட்களிலேயே இரண்டாக உடைக்க (ஒரு விதத்தில்) காரணமாக இருந்ததன் மூலம் எம்.ஜி.ஆரைப் பழி வாங்கி விட்டீர்களே! பிறகு நீங்களும் ஜானகி அம்மையாரும் இரு கோஷ்டியாகப் பிரிந்து நின்ற அமைச்சர்களுக்குத் தலைமை தாங்கி ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி இறைத்துக்கொண்டு எம்.ஜி.ஆரின் மந்திரிசபையை நாற அடித்துப் பழிவாங்கினீர்கள்!

நடந்து முடிந்த தேர்தலின்போது பிரசாரத்தில் நீங்கள் எம்.ஜி.ஆரைப் பற்றிச் சம்பிரதாயமாகப் பேசியது தவிர, எம்.ஜி.ஆர். இமேஜை உபயோகித்துப் பிரசாரம் செய்ததாகவே தெரியவில்லையே! உங்கள் பலம், உங்கள் செல்வாக்குத்தான் வோட்டு வாங்கித் தருகிறது என்று காட்டி, எம்.ஜி.ஆரைப் பழிவாங்கிவிட்டீர்களே! இப்படி பலவிதங்களில் எம்.ஜி.ஆர். இறந்த பிறகு அவரைப் பழிவாங்கினீர்கள் என்றே நினைக்கத் தோன்றுகிறது! பாவம்,

உங்களைவிட கலைஞர்தான் அதிகமாக எம்.ஜி.ஆரைப் பற்றி இப்போதெல்லாம் புகழ்ந்து பேசுகிறார்.

யாருடைய நிர்ப்பந்தத்தால் உங்கள் வாழ்க்கை பாதிக்கப்பட்டதோ, அவருடன் கூட இருந்தே கடந்த தேர்தலில் 'எம்.ஜி.ஆர். செல்வாக்குத் தேவையில்லை' என்று நிரூபித்துப் பழிவாங்கிவிட்டீர்கள் என்று தோன்றுகிறது.

ஒருவேளை அரசியலில் நீங்கள் நுழைந்த நோக்கமே இதுதானோ ..?

அந்த நோக்கம் முடிந்துவிட்டதனால்தான் அடிக்கடி அரசியலை விட்டுப் போய்விடலாம் என்று நினைக்கிறீர்கள் எனக் கருதுகிறேன்.

ஆனால் -

உங்கள் வாழ்க்கையில் நிர்ப்பந்தங்கள் முடிந்தபாடில்லை ... ராஜீவ் காந்திக்கு, திருநாவுக்கரசுவுக்கு, வீரப்பனுக்கு, எஸ்.டி.எஸ்-ஸுக்கு நீங்கள் இல்லாமல் இங்கே அரசியல் இல்லை. சசிகலாக்கள், நடராஜன்கள், வட்டச் செயலாளர்கள், மன்றச் செயலாளர்கள் உங்களை நம்பித்தான் பிழைக்க வேண்டும்.

நீங்கள் அவ்வளவு சுலபத்தில் அரசியலைவிட்டு வெளியேற இவர்கள் விடப்போவதில்லை.

சென்ற வாரம் நீங்கள் அரசியலிலிருந்து விலகுவதாக அறிவித்த செய்தி வந்த தினத்தன்று காலை உங்கள் வீட்டுவாசலில் கூட்டம், மறியல்...'போகாதே... புரட்சித் தலைவி' என்று தொண்டர்கள் மன்றாடினார்கள். ஆனால், அன்று நடந்த நாடகம் உங்களுக்குத் தெரியாதே? உங்கள் வீட்டுக்கு வெளியே ஆயிரக்கணக்கில் யாரும் கூடவில்லை. மொத்தமாகச் சுமார் இருநூறு பேர். அத்தனை பேரும் இரண்டு வட்டச் செயலாளர்களால் திரட்டிக்கொண்டு வரப்பட்டவர்கள். அன்றிரவே நீங்களும் உங்கள் பாணியில் பால்கனியில் தோன்றி, வாபஸ் வாங்கிவிட்டீர்கள்.

இன்னும் ஒரு முறை நீங்கள் 'விலகல் - விலகல் இல்லை' பல்டி அடித்தால் போதும்... இந்தக் கூட்டத்தைத் திரட்டக்கூட வட்டங்கள் கஷ்டப்படும்.

ஆனால்...

ஒன்று மட்டும் என் தலையைப் பிய்த்துக் கொள்ள வைக்கிறது. இப்படித் தொடர்ந்து தாங்கள் அடிக்கும் அந்தர்பல்டிகளால் 'ராஜினாமா' என்ற மிக சீரியஸான ஒரு விஷயம் எவ்வளவு தமாஷாகப் போய்விட்டது என்று நினைத்துப் பார்த்தீர்களா? நாளைக்கு நீங்கள் மிகமிக நிஜமாகவே ராஜினாமா செய்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்தச் செய்தியை 'புலி வருது' கதையைப் போல ஒரு பத்திரிகைகூட நம்பிப் போடாமல் இருந்துவிடும் ஆபத்து இருக்கிறதே! தங்கள் ராஜினாமா மக்களுக்கு தெரியாமலேயே போய்விடக் கூடுமே! இதுபற்றி ஒரு விநாடிகூட நீங்கள் சிந்தித்துப் பார்க்காததுதான் வியப்பாக இருக்கிறது!

இந்த அடிப்படை விஷயத்தைத் தெரிந்து கொள்ள மிகவும் அறிவாளியாக இருக்க வேண்டிய அவசியம்கூட இல்லை. சாதாரண அரசியல்வாதியாக இருந்தாலே போதுமே! அப்படியிருக்க, சித்தார்த்தபாசுவின் குவிஸ் நிகழ்ச்சியில் பங்கேற்கும் அளவுக்கு 'ஐ க்யூ' கொண்ட தங்களுக்கு ஏன் இப்படி எல்லாமே ஒரு விளையாட்டாக இருக்கிறது?

சந்நியாசம் என்று முடிவாகச் சொல்லிவிட்டுக் கிளம்பியவர் தெருக்கோடி வரை போவதற்குள் மனைவியும் குழந்தையும் போய் வழிமறித்து அழுதவுடன் 'சரி, இதுதான் கடைசி எச்சரிக்கை!' என்று சொல்லிவிட்டு அசடு வழிந்து கொண்டு திரும்புவது எவ்வளவு நகைப்புக்கிடம்? அவருக்கு மனைவியைப் பார்த்தவுடன் சம்சார ஆசை வந்து விட்டது! உங்களுக்கு எதில் ஆசை என்று முடிவாக ஒரு முடிவுகட்டிக் கொள்ள வேண்டாமா?

எந்த முடிவாக இருந்தாலும் அதற்கு ஒரு 'விலை' கொடுத்துதானே தீரவேண்டும்? 'அனுபவம்' வாய்ந்த அரசியல்வாதியாக மாறியும்கூட ஏன் இது தங்களால் முடியவில்லை?

- ஒரு அப்பாவி வாக்காளன்